දුරකථන:
தொலைபேசி
Telephone:

සභාපති / தலைவர் / Chairman: (+94) 011 2556840

ලේකම් / செயலாளர்: / Secretary: (+94) 011 2556831

කාර්යාලය / காரியாலயம் / Office: (+94) 0112556833/0112556834

ෆැක්ස්: / தொ.நகல / Fax: (+94) 011 2556836, 011 2556837

විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல்: / e-mail: fincom@sltnet.lk

# මුදල් කොමිෂන් සභාව

( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ජ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)

# நிதி ஆணைக்குழு

(அரசியலமைப்பின் 154`எ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)

# FINANCE COMMISSION

(Established under Article 154 R of the Constitution)

48, වජිර පාර,
කොළඹ 04.

48, வஜிரா வீதி,
கொழும்பு-04, இலங்கை.

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.

මගේ අංක / எனது இல: / My No: FC/3/2/2015

ඔබේ අංක / உமது இல: / Your No:

දිනය / திகதி: / Date: 2015.05.12

TRANSLATION
தமிழ்மொழியாக்கம்

பிரதம செயலாளர்

மேல் / மத்திய / தென் / வட / வடமேல் / வடமத்திய / கிழக்கு / சப்பிரகமுவ / ஊவா மாகாணம்

**<u>2016 ஆம் ஆண்டின் மாகாண மூலதனச் செலவுத் தேவைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள்</u>**

2016 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைத் தேவைகள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்துக்கு (Form 2) க்கு அமைவாக, ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் தயாரிப்பது அவசியமாகும். இங்கே, அந்தந்த நிறுவனம் தொடர்பாக 2013-2017 காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ள நடுத்தர கால நிறுவன பெறுபேற்று சட்டகத்துக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டில் மூலதனத் தேவைகள் சமர்ப்பிக்கப்படுவதோடு, எதிர்பார்க்கும் இலக்குகளை (Goals) அடையும் பொருட்டு நடவடிக்கை எடுப்பதற்காக உத்தேச வேலைத் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தின் கீழும் காட்டப்பட்டுள்ள முன்னுரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதான அபிவிருத்தித் துறைக்கு அமைவாக இந்தத் திட்டத்தைத் தெரிவு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப் படுவது தொடர்பாக உங்களின் விசேட அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது, கடந்த வருடங்களில் மாகாணத்துக்குக் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகள் மற்றும் உண்மையாகச் செய்யப்பட்ட செலவுகள் ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு யதார்த்தமாக அதாவது செயன்முறை ரீதியாக நடைமுறைப்படுத்தத் தக்கதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். தொடர்பான திட்டம் அடையாளம் காணும்போது கீழே காட்டப்பட்டுள்ளவை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

i. அரசின் பாரிய மற்றும் துறைகள் மட்டத்திலான கொள்கைகள் பின்பற்றப்படல்

ii . திட்டங்களின் தரம் உறுதிப் படுத்தப்படுவதோடு, அவற்றின் மூலம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைவது தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல்

iii . மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் அபிவிருத்தி மட்டத்துக்கும் அமைவாக, சாதாரணமாக நிதி பங்கிடும் பொருட்டு திட்டங்களை அடையாளம் காணுதல்( இதன் பொருட்டு பயன்படுத்தக்கூடிய காட்டிகள் சில இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது)

iv . மாகாண அபிவிருத்திக்குப் பொருத்தமான முன்மாதிரித் திட்டங்கள் (Flagship Projects) அடையாளம் காணுதல்

v . திட்டமிடும் போதும், மற்றும் திட்டம் நடைமுறைப்படுத்தும் போதும் மக்களின் பங்களிப்பை உச்ச அளவில் பெற்றுக்கொள்ளுதல்

vi . பல்வேறு மட்டங்களில் பணியாற்றும் அரச ஊழியர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்

vii. வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக அரச தனியார் நிறுவன முரண்பாடின்றி அல்லது முகாமைத்துவ ஒப்பந்த முறைகள் பின்பற்றுதல்

viii .உற்பத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் மாகாணத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு உற்பத்தியாளரின் பங்களிப்பை தாராளமாகப் பெற்றுக் கொள்ளல்

ix . தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பு செய்தலும் மற்றும் அவற்றுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல்

x . மாகாணங்களுக்கு இடையிலும் மாகாணத்தினுள்ளும் காணப்படும் அபிவிருத்தி வேறுபாடுகளைக் குறைத்தல்

xi . புவியியல் ரீதியாக வேறுபாடுகளுக்கு - வசதிக்குறைவுகளுக்கு முகம் கொடுக்கும் கிராமங்கள்-பிரதேசங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல்

xii. திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக போதியளவு முன் ஆயத்தம் செய்தல் மற்றும் சாத்தியங்கள் பற்றி ஆராய்தல்

xiii .மாகாண பௌதீக மற்றும் மனித வளங்களைப் பெற்றுக் கொள்ளுதல்

xiv.தேசிய மற்றும் மாகாண அபிவிருத்தித் திட்டங்களில் இரட்டிப்புத் தன்மைகளை இல்லாதொழித்தல்

xv. புதிய வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக கடந்த ஆண்டுகளில் முடிவுறாத வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்குதல்

xvi .கட்டிடங்களை புதிதாக நிர்மாணிக்கும்போது உண்மையான தேவைகளை இனம் காண்பதோடு அதிக செலவுகளைக் கொண்ட மதிப்பீடுகள் தயாரிப்பதைத் தவிர்த்துக்கொள்ளல்

xvi i .எண்ணிக்கையில் அதிக அளவான கட்டிடங்களை ஆரம்பிக்காமல் குறிப்பிட்ட ஆண்டில் பூர்த்தி செய்யக்கூடியதாக சில கட்டிடங்களை மாத்திரம் நிர்மாணித்தல்

xviii .நிதி ஆணைக்குழுவால் மூலதனச்செலவுகள் தொடர்பாக காலத்துக்காலம் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களையும் மற்றும் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் பின்பற்றுதல்

மேற் குறிபிட்டவற்றால் எதிர்பார்க்க படுவது என்னவென்றால் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை முதலீடு செய்து, மாகாண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகும். ஆகவே, இந்தத் தேவைகளைச் சமர்ப்பிக்கும்போது மாகாண அரசியல் தலைவர்களோடு கலந்துரையாடி, மாகாண அமைச்சுச் செயலாளர்கள் தலைமையில் முறையாகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2015 ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன்பாக நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கும்படி தயவாகத் தெரிவிக்கின்றேன்.

(கையொப்பம்) டபிள்யு எச் முனசிங்க
செயலாளர்
நிதிஆணைக்குழு

பிரதிகள்

1. பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்)
2. பிரதி பிரதம செயலாளர் (நிதி)
3. உதவி கணக்காய்வாளர

Form 02

# Annual Provincial Needs – 2016
# Province Specific Development Grants (PSDG)

**Province: ………………………………………………………………………..**
**Provincial Ministry: …………………………………………………….**
**Department/ Agency: …………………………………………………..**

**Thrust Area 1: ……………………………………………..**

| Goal No. | Goals | KPIs | Baseline | Target | | Projects In order of priority | Need for 2016 (Rs.mn) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2011 | 2015 | 2016 | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| Sub Total | | | | | | | |

**Thrust Area 2: ……………………………………………..**

| GoalNo. | Goals | KPIs | Baseline | Target | | Projects In order of priority | Need for 2016 (Rs.mn) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2011 | 2015 | 2016 | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| Sub Total | | | | | | | |

***Summary of Needs under Thrust Areas***

| Thrust Area | Sub Total (Rs.mn) |
|---|---|
| 1 | |
| 2 | |
| Cumulative Total | |